பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5 00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 06 சனிக்கிழமை 20 06 1992 UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 205

# தெரிவுக் குழுவின் திட்டத்தை தமிழ்க்கட்சிகள் நிராகரித்தன!

## இணைப்பு இல்லாத யோசனையை ஏற்க முடியாது என்றும் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நாடாளுமன்றத் தெரிவுக் குழு தயாரித்திருக்கும் புதிய திட்டத்தை கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் அடியோடு நிராகரித்து விட்டன. வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லாத எந்தத் தீர்வையும் ஏற்பதில்லை என்று அக்கட்சிகள் ஒன்றாக முடிவு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் ஏஜென்ஸிச் செய்திகள் இந்த வலை வெளியிட்டன.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு இனப் பிரச்சினைத் தீர்வாக உத்தேச திட்டம் ஒன்றை கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளிடம் சமர்ப்பித்திருப்பதாக அச்செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

புதிய திட்டத்தின் கீழ் —

வடக்கு, கிழக்குக்கு வெவ்வேறு மாகாண அலகுகள் அமைக்கப்படும். இந்த அலகுகளிலிருந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் பின்னர் ஒன்று கூடி கூட்டிணைப்புக் குழு ஒன்றை அமைப்பர். — என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் கூட்டிணைப்புக் குழு எப்படிச் செயற்படும் என்றோ அதன் அதிகாரங்கள் குறித்தோ, அது எங்கு நிலைகொண்டிருக்கும் என்பது பற்றியோ தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

(6 ஆம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக அனுமதி:

## முடிவை மறுபரிசிலனை செய்ய அதிபர்கள் கோரிக்கை

1990 ஆம் ஆண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிக்கு, வழமையாக நடந்த பரீட்சையையும், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற விசேட பரீட்சையையும் தனித்தனியாகக் கருதி மாணவர்களைத் தெரிவு செய்வதென்ற உத்தேச திட்டத்தை மறுபரிசிலனை செய்க!

—இவ்வாறு யாழ். மாவட்ட அதிபர்கள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற சங்கத்தின் விசேட கூட்டத்தில் உத்தேச திட்டத்தினால் தமிழ் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து ஆராயப்பட்டது.

உத்தேச முடிவை மறுபரிசிலனை செய்யுமாறு சம்பந்தப்பட்ட சகலரையும் கேட்டுக் கொள்வதென அங்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உயர் கல்வி அமைச்சர் ஆகியோருக்கும் மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளன. [ஒ-3]

## மட்டு. பாலமடுவில் நேற்று கடும் சண்டை!

### ஹெலியும் தாக்குதல் நடத்தியது

கொழும்பு, ஜூன் 20

மட்டக்களப்பு பாலமடு என்ற இடத்தில் நேற்று படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பெரும் சண்டை இடம்பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இரு தரப்புக்கும் இடையே நீண்ட நேரம் மோதல்கள் இடம் பெற்றன என்றும் —

படையினருக்கு உதவியாக ஹெலி ஒன்று அப்பகுதியில் கடும் தாக்குதலை நடத்தியது என்றும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## ஈழ அகதிகள் நிலை குறித்து பரிந்து பேசுகிறார் கலைஞர்!

சென்னை, ஜூன் 20

ஈழத் தமிழ் அகதிகளின் நிலை குறித்து தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி மிகவும் 'பரிவுடன்' சில வார்த்தைகளை கூறியுள்ளார்.

''எம். ஜி. ஆர். ஆட்சியிலும், தி.மு.க. ஆட்சியிலும் ஈழத் தமிழ் அகதிகளுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் பறிக்கப்பட்டுள்ளன. அவர்கள் தற்போது மனிதாபிமான மற்ற முறையில் நடத்தப்படுகின்றார்கள்''— என்று கருணாநிதி கூறுகிறார்.

அகதிகள் தாங்களாக இலங்கைக்குத் திரும்பிச் செல்லும் நிலை உருவாகும் வரை, அவர்களுக்கு தேவையான உதவிகளை மத்திய, மாநில அரசுகள் செய்யவேண்டும் என்றும் திரு. கருணாநிதி தெரிவித்துள்ளார். [ஒ-எ]

## கனடாவில் உள்ளோர் அங்கு உறவினரை அழைக்க வசதி!

### புதிய சட்டவிதிகள் அறிவிப்பு

ஒட்டாவா, ஜூன் 20

கனடாவில் வசிப்பவர்கள் தமது நெருங்கிய உறவினர்களை அங்கு அழைத்துக் கொள்வதற்கு வசதியாக கனடா நாட்டு குடியேற்ற சட்டவிதிகள் தளர்த்தப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கனடாவில் வசிப்பவர்கள் தமது இரத்த உறவினர்களை அல்லது தாம் திருமணம் செய்யப் போகின்றவரை கனடாவுக்கு பிரச்சினையின்றி இலகுவாக அழைத்துக் கொள்ள புதிய சட்ட விதிகள் உதவும் எனக் கூறப்படுகிறது.

கனேடிய குடியேற்ற அமைச்சர் பேர்னாட் வல்கொட் கடந்த செவ்வாயன்று வெளியிட்ட சட்டவிதிகளின்படி மூன்று வகையான குடியேற்றவாசிகள் கனடாவுக்குள் குடியேற இலகுவாக அனுமதி வழங்கப்படும். அந்த மூன்று பிரிவினரும் வருமாறு:-

★ கனடாவில் வசிப்பவர்களின் நேரடியான குடும்ப அங்கத்தவர்கள். அதாவது கணவன் அல்லது மனைவி, காதலன் அல்லது காதலி,

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சந்தையில் மீண்டும் ம.எண்ணெய் தாராளம்!

திடீரென மாயமாக மறைந்து விட்டிருந்த மண்ணெண்ணெய் நேற்று மீண்டும் வெளியே தலைகாட்டியது! குடாநாட்டில் வழமைபோல மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட்டது.

சில இடங்களில் போத்தல்களில் நிரப்பப்பட்டு காட்சிக்கும் கூட வைக்கப்பட்டிருந்தது.

மண்ணெண்ணெய் கடந்த இரு நாட்களாக எங்கே போனது? என்ன நடந்தது என்று தெரியாமல் மக்கள் ஆச்சரியத்துடன் விழித்தனர்.

எது எப்படியோ மண்ணெண்ணெய் மீண்டும் சந்தைக்கு வந்துவிட்டது! வழமையான விலையிலும் விற்பனையானது. மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்!

இதேவேளை, கொம்படி ஊடாக குடாநாட்டுக்கு மண்ணெண்ணெய் மற்றும் உணவுப் பொருள்களுடன் நேற்று லொறிகள் பல வந்து சேர்ந்தன. [ஒ-3]

## பதுக்கலில் ஈடுபட்ட வர்த்தகர்கள் சிக்கினர்!

மண்ணெண்ணெயைப் பதுக்கி கொள்ளைலாபம் ஈட்ட முயன்ற பலர் விடுதலைப் புலிகளின் கண்காணிப்புப் பிரிவினரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

குடாநாட்டின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகளின் போதே கொள்ளை லாபம் ஈட்ட முயன்ற வர்த்தகர்கள் சிக்கிக்கொண்டனர்.

நேற்று முன்தினம் தட்டார தெருச் சந்தியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை ஒன்றின் போது மட்டும் 25 பரல் மண்ணெண்ணெய் கைப்பற்றப்பட்டது. பதுக்கலில் ஈடுபட முயன்ற நடைபாதை வியாபாரி ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட இந்த 25 பரல் எண்ணெய்யும் அந்த இடத்தில் வைத்தே பாவனையாளர்களுக்கு உரிய விலையில் விற்பனை செய்யப்பட்டது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. [உ]

## ம. எண்ணெயை பதுக்குவது கடும் குற்றமாகும்

### காவல்துறை பொறுப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

தற்போதைய நெருக்கடி நிலையைச் சாட்டாக வைத்து, மண்ணெண்ணையை சில வர்த்தகர்கள் பதுக்கி கொள்ளை இலாபம் பெற முனைகிறார்கள்.

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் இவ்வாறான நடவடிக்கைகள் கடும் குற்றமாகவே கருதப்படும்.

[illegible] பொறுப்பாளர் இரு. பா. [illegible] செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்தக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

பதுக்கல் மற்றும் கூடிய விலையில் விற்றல் போன்ற நடவடிக்கைகள் பற்றி விழிப்புடன் இருக்குமாறும், அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் பற்றிய தகவல்களை அண்மையில் உள்ள [illegible] நிலையங்களில் வழங்கி ஒத்துழைக்குமாறும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, ஜூன் 20

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் நீங்கலாக ஏனைய பகுதிகளில் வியாழன் காலை 6 00 மணிமுதல் அமுலுக்கு வந்த ஊரடங்கு நேற்றுக் காலை 6 00 மணியுடன் நீக்கப்பட்டுவிட்டதாக கொழும்பில் அறிவிக்கப்பட்டது. (இ-த)

## மலையகத்தில் கொள்ளை

கொழும்பு, ஜூன் 20

தெரணியகல யட்டகுமால கோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புக்குள் புகுந்த முகமூடிக் கொள்ளைக் கோஷ்டியினர் தங்க நகைகள் உட்பட பெறுமதி வாய்ந்த பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றுவிளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு இந்தக் கொள்ளை இடம் பெற்றுள்ளது.

இது குறித்துப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஒ-3)

## நீதிமன்றை பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஜூன் 20

சிறைக்காவலர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டதை ஆட்சேபித்து சிறைச்சாலை உத்தியோகஸ்தர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்தனர்.

நேற்று முன்தினம் மாளிகாகந்தை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இச்சம்பவம் நடந்தது. [இ-9]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற எதிர்பாராத வெடி விபத்துச் சம்பவம் ஒன்றில் மதிவதனன் [வேலப்போடி ஜீவரத்தினம் — மட்டக்களப்பு] என்ற போராளி வீரமரணமடைந்தார். [ஒ-5]

## படையினரின் சூட்டுக்கு இளைஞர் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 20

திருகோணமலையில் உப்பூறல் என்னுமிடத்தில் மறைந்திருந்த படையினர் நடத்திய தாக்குதலில் இளைஞர் ஒருவர் பலியானார். கடந்த திங்கட்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது.

நலவூர் என்ற இடத்தில் இருந்து இலங்கை முகத்துவாரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த சிவலிங்கம் தனம் [வயது 30] என்ற இளைஞரே படையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவர் ஆவார். [ஒ-5]

## இரு தமிழர்கள் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜூன் 20

போட்டோக்களில் கையொப்பமிடுவதற்காக இராணுவ முகாமுக்குச் சென்ற தமிழர் இருவர் அங்கு வைத்து படையினரால் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு மூதூரில் இச்சம்பவம் இடம்பெற்றது. அங்குள்ள ஜி. பி. எவ். முகாமில் தமது போட்டோக்களில் கையொப்பமிடச் சென்ற அருளானந்தம் ரவீந்திரமூர்த்தி [வயது 28], மாரிமுத்து வெற்றிவேல் [வயது 37] ஆகிய இருவருமே கைதானவர்கள் ஆவர். [ஒ-5]

## சர்மாவின் வேட்பு மனுக்கள் நேற்று தாக்கல்

புதுடில்லி, ஜூன் 20

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள உப ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மாவின் வேட்பு மனுக்கள் நேற்று தாக்கல் செய்யப்பட்டன.

இரண்டு தொகுதிகளாகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் ஒரு தொகுதியில் பிரதமர் பி. வி. நரசிம்மராவும், தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும்; வேறு 3 முதலமைச்சர்களும் கையெழுத்திட்டிருந்தனர். (ஒ-எ)

## மட்டக்களப்பில் வயோதிபர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 20

மட்டக்களப்பு பாலையடியில் படையினர் கடந்த 17 ஆம் திகதி வழிப்போக்கரான தமிழர் ஒருவரை சுட்டுக் கொன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

38 ஆம் கிராமத்தைச் சேர்ந்த கந்தப்பர் வீரக்குட்டி [வயது 70] என்ற வயோதிபரே உயிரிழந்தவர் ஆவார். அவருடன் வந்த மன்னிப்போடி அருளானந்தம் என்பவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். [ஒ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு கடுமையாக உழையுங்கள்

## எம். பிக்களிடம் பிரேமா கோரிக்கை

கொழும்பு, ஜூன் 20

இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தெரிவுக் குழுவில் பங்குபற்றி கடுமையாக உழைக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்தார் என அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்றை முன் வைக்கும்படி தம்மைச் சந்தித்த தமிழ், முஸ்லிம் குழுக்களிடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-த)

# முக்கிய அறிவித்தல்

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய நித்திய பூசைகள், செவ்வாய்க்கிழமை விழாக்கள் வழமை போல் நடைபெறுகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத்தருகிறோம் தொடர்பு கொள்ள விரும்புவோர், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை என்ற முகவரிக்குக் கடித மூலமாகவோ நேரிலேயோ தொடர்பு கொள்ளும்படி தேவஸ்தானத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம். துர்க்காபுரம் மகளிர் இல்லம் சம்பந்தமான தொடர்புகளையும் மேற்படி முகவரிக்கே வைத்துக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P.,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை

(21465)

உ

# நன்றி நவில்கின்றோம்

31-05-1992 ஞாயிற்றுக்கிழமை எங்கள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இடம்பெற்ற அனர்த்தங்களையும், அழிவுகளையும் முன்னிட்டு எதிர்ப்புக்குரல் எழுப்பியும், எமக்கு ஆறுதல் வார்த்தைகள் வழங்கியும், மகளிர் இல்லப் பிள்ளைகளுக்கு வேண்டிய உணவு வசதிகள், இருப்பிட வசதிகள் செய்தும் உதவிய சகல சமய மன்றங்கள், மதஸ்தாபனங்கள், வர்த்தக சங்கங்கள், ஆலய நிர்வாகங்கள், யாழ் பல்கலைக்கழகம், மறை மாவட்ட பீடம், கொழும்பு அகில இலங்கை இந்து மா மன்றம், கைதடி சைவச் சிறுவர் இல்லம், கம்பன் கோட்டம், நல்லை ஆதீனம், இராமநாதன் கல்லூரி, மில்க்வைற் நிறுவனம் போன்ற அனைத்துக்கும் எமது தேவஸ்தானத்தின் சார்பில் நன்றியைக் கூறுகின்றோம்.

மேலும், மேற்படி செய்திகளை வெளியிட்டும், ஆசிரியத்தலையங்கத்தில் குறிப்பிட்டும் உதவிய உதயன், ஈழநாதம், ஈழநாடு, முரசொலி, வீரகேசரி, தினகரன், ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும், இவை சார்ந்த நிறுவனங்களுக்கும் எமது தேவஸ்தானத்தின் சார்பில் நன்றி கூறுகின்றோம்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

[21464]

# ஓராண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம்: 17 — 06 — 1967



வீர மரணம்: 02 — 06 — 1991

## லெப். பரமேஸ்
### (தா. கனகரத்தினம் உதயகுமார்)

காலம் இது வென்றே
எமைப் பிரிந்தாய் - குமரா
கண் கலங்கி ஏங்கி
காலமெல்லாம் வாடுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
ஐயா, அம்மா, தம்பி, தங்கை,
அத்தான், அக்கா, மருமக்கள்,
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

ஆலங்கேணி,
பூநகரி.

(சி/2697)

# உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோவில் மஹோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 28 ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும், இடம் பெறும். [ஓ 5]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 20

வட்டு, மேற்கு அருள்மிகு முருகையா கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று காலை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். (த)

★ ★ ★

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 13 ஆம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும். (உ)

# கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். மாவட்டத்தில் தற்சமயம் ஏற்பட்டுள்ள நிலை குறித்து ஆராய்வதற்கான விசேட கூட்டம் ஒன்றை யாழ் அரச அதிபர் கூட்டியுள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. (உ 3)

# 2 ஆயிரம் பேர் ஜெயலலிதா 'பச்சை' குத்தினர்

கோவை, ஜூன் 20

முதலமைச்சர் ஜெயலலிதாவின் உருவத்தை தமது கைகளில் 'பச்சை' குத்திக் கொள்வது கோவையில் அ. தி. மு. க. தொண்டர்கள் மத்தியில் மிக வேகமாக நடந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது

கோவையில் உள்ள 'இதய தெய்வம்' மாளிகையில் வைத்து காலை முதல் இரவு வரை 'பச்சை' குத்துவது நடைபெற்று வருகிறது. இதுவரை 2 ஆயிரத்துக்கு அதிகமானோர் பச்சை குத்திக் கொண்டனர்.

[ஒ-எ]


# நாவலர்

சித்தன்கேணி.

பொருளியல் [Sat & Sun.]

திரு. க. கலாதரன்

92 A/L
வினா - விடை மட்டும்
மாலை 5 மணி

93 A/L
தேசிய வருமானம்
மாலை 4 மணி

94 A/L
உற்பத்தி சாதிய - வளையி
மாலை 3 மணி

அளவையியல்

திரு. S. சயந்தன்

93, 94 A/L
குறியீட்டு அளவையியல்

ஆரம்பம்:
20 - 06 - 1992
(சனி) இன்று
மாலை 5 மணி

(இ-3687)


# வார இறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 20

நவாலி வளர்மதி சனசமூக நிலையம் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இரண்டு ஆட்டங்கள் இன்றும், மற்றும் இரண்டு ஆட்டங்கள் நாளையும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இன்று பிற்பகல் 3 மணிக்கு அராலி ஜேம்ஸ் வி. க. அணியுடன் தோப்புக்காடு இளைஞர் வி. க. அணி மோதும். மாலை 4 மணிக்கு அராலி அண்ணா வி. க. அணியுடன் கோப்பாய் கோல்ட் ஸ்ரார் வி. க. அணி விளையாடும்.

நாளை பிற்பகல் மூன்று மணிக்கு முதல் ஆட்டத்தில் மூளாய் வளர்மதி வி. க. அணியை எதிர்த்து நாவாந்துறை ஜோன் கெனடி வி. க. அணி விளையாடும். மாலை 4 மணிக்கு இரண்டாவது ஆட்டத்தில் திருநகர் பாரதி "ஏ" அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றீஸ் அணி மோதும். [உ]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் — 17 வயதுக்குட்பட்டோர் ஆட்டங்களில்—இன்று யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதும். இந்த ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்து மைதானத்தில் ஆரம்பமாகும.

# நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

வேலணை, ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் பிரிவுகள் இணைந்து நடத்தும் — தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்தோருக்கான — விளையாட்டு விழாவின் முதல் நிகழ்ச்சி நாளை ஆரம்பமாகின்றது.

முதல் நிகழ்ச்சியாக ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டம் ('செற்—அப்'') நாளை காலை 8 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

# இன்னும் இருளில்!

கொழும்பின் சில பகுதிகளில் மின்சார விநியோகம் தொடர்ந்து தடைப்பட்டிருக்கிறது.

அண்மையில் பெய்த பெருமழை காரணமாக நகரில் மின் விநியோகம் தடைப்பட்டது. நிலத்துக்கு அடியில் உள்ள சில கேபிள்கள் பழுதடைந்துள்ளதால் சில பகுதிகளுக்கு மின் விநியோகத்தை இனனும் வழங்க முடியாமல் இருப்பதாகவும் தொழில்நுட்ப காரணங்களால் இந்தக் கேபிள்களை இப்போதைக்குத் திருத்த முடியாதுள்ளதாகவும் மின்சாரசபை தெரிவித்துள்ளது.

மேலதிக ஊழியர்கள் அமர்த்தப்பட்டு வேலை நடைபெற்று வருகின்றபோதிலும் சில பகுதிகளுக்கு இன்னும் சில காலங்களுக்கு மின்சாரம் வழங்க முடியாமல் இருக்கும் எனவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

[இ-10]

# விண்ணப்பதினம் நீடிப்பு

சுங்கத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான ஆள் சேர்ப்பு போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்ப திகதி இம்மாதம் 30 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

# 400 மீனவரை காணவில்லை!

ஒரிஸ்ஸா மாநிலத்தில் வியாழன் வீசிய சூறாவளியில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆறு என்றும், 400 மீனவர்களைக் காணவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

# கேள்விகளுக்கு பதில் அளிக்க சபைக்குவராத அமைச்சர்கள்

## சபாநாயகர் கண்டனம்

எம். பிக்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்க நாடாளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் சமூகமளிக்காததை சபாநாயகர் கண்டித்தார்.

வாய் மூலக் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் சமூகமளிக்க முடியாத நிலை ஏற்படுமிடத்து, பதில் அளிக்க இன்னோர் அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்றும் சபாநாயகர் எம். எச். முஹம்மது கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி எம் பிக்களான ரிச்சர்ட் பதிரான, அமரசிறி தொடங்கொட ஆகியோர் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க சம்பந்தப்பட்ட அமைச்சர்களான பி. தயாரத்னாவும் ஏ. எம். எஸ். அதிகாரியும் சமூகமளித்திருக்கவில்லை.

அதனைத் தொடர்ந்தே சபாநாயகர் தனது கண்டனத்தை வெளியிட்டார்.

# திருக்கோவிலில் அகதிகள்

திருக்கோவில் உதவி அரச அதிபர் பிரிவில் 2, 224 குடும்பங்கள் 18 இடங்களில் அகதிகளாக உள்ளன. இவர்களுக்கான சுயதொழில் வாய்ப்பு உதவிகளை செஞ்சிலுவைச் சங்க திருக்கோவில் கிளை வழங்கவிருக்கிறது

[த-3]

புளியங்கூடல், ஊர்காவற்றுறை செருத்தனைப்பதி
ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தான
தேர் உற்சவ தினத்தை ஞாபகப்படுத்தும்

# வெளியீட்டுப் பா

இன்று (20 — 06 — 92) தேர் உற்சவ தினமாகும்.

அம்மா மகாமாரி அருள்புளியங் கூடலிலே
வைகாசி கொடியேற்றி ஆனியிலே தேரூர்வாய்
இம்மாதம் இத்தினமே எழிலரசி தேர்க்கோலம்
கண்ணார நாம்கண்டு சுருதுவரம் பெறுங்காலம்
பெம்மானின் பெருமாட்டி பெருநுமடி யாருருகி
உன்வாசல் வரமுடியா துலர்ந்தசரு காகிவிட்டோம்
நிம்பதிதான் எப்பொழுது நீதருவாய் நிழலடியில்
மம்மரொடு மயக்கறுந்து மனிதரென வாழ்ந்
திடுவோம்.

— வித்வான் சு. சின்னத்தம்பி

அம்பிகை அடியார்கள்
தீவகம்

குறிப்பு: இராணுவ நடவடிக்கையால் இவ்வாண்டு உற்சவம் நடைபெறவில்லை.

[21469]

# யாழ்ப்பாணக் கல்லூரி

வட்டுக்கோட்டை

★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 1992 / 93 கல்வி ஆண்டிற்கான வெளிவாரிப் பட்டப்படிப்பு விரிவுரைகள் 1-7-92 பி ப. 3.00 மணிக்கு ஆரம்பமாகும்.

★ பேராதனைப் பல்கலைக்கழக கலைமானி (B. A) விரிவுரைகளும் அதே தினம் ஆரம்பமாகும்.

★ மாணவர்கள் 27-6-1992 க்கு முன்னர் தங்கள் பெயர் விபரங்களைக் கல்லூரி வளாகத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ்ப்பாணக் கல்லூரி

C/2132

# தென்னை மரம் கள்ளிறக்குவதற்கான குத்தகை

கோம்பையன் மணல் மயானத்தில் இருக்கின்ற நாற்பத்திஇரண்டு (42) தென்னை மரங்களிலிருந்து 1-7-92 தொடக்கம் 30-6-93 வரையான காலப் பகுதியில் கள்ளிறக்குவதற்கு தேவையானோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி விண்ணப்பகாரர்களின் கேள்வித்தொகை பன்னீராயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கு அனுமதி வழங்கப்படும். கால எல்லை விண்ணப்பதாரரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 28-06-92 பி.ப. 2 மணி வரை.

நிர்வாக கட்டளைப்படி
செயலாளர்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
செயலாளர் நா. சின்னத்துரை
2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(21468)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வருட இறுதிக்குள் தீர்வு; ஜனாதிபதி நம்பிக்கை!

கொழும்பு, ஜூன் 20

"இந்த வருடத்துக்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று ஜனாதிபதி நம்புகிறார். சகலரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இப்படிக் கூறினார் அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க.

கடந்த புதன்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அவர் அளித்த பதில் வருமாறு:-

செய்தியாளர்: இனப்பிரச்சினைக்கு ஒரு வருடத்துக்குள் தீர்வு காணப்பட வேண்டுமென்று ஜனாதிபதி கூறியுள்ளாரே. இது பற்றி மந்திரி சபையிலும் குறிப்பிட்டாரா?

ரணில்: ஒரு வருட கால எல்லை பற்றி அவர் கூறவில்லை. நாம் சகல ஒத்துழைப்புகளையும் வழங்கி கூடிய விரைவில் தீர்வுகாண வேண்டும் என்றே அவர் கூறினார்.

செய்தியாளர்: இந்த வருடத்துக்குள் ஜனாதிபதி விரும்பும் விதத்தில் தீர்வு வருமா?

ரணில்: இந்த வருடத்துக்குள் தீர்வு காணலாம் என அவர் நம்புகிறார். சகலரும் ஒத்துழைத்தால் தீர்வு காணலாம்.

செய்தியாளர்: 4 அம்சத் திட்டம் பற்றி ஜனாதிபதி ஏதும் கூறினாரா?

ரணில்: அவை பற்றி மந்திரி சபையில் ஆராயவில்லை.

செய்தியாளர்: இந்த வருடத்துக்குள் தீர்வு காணலாம் என ஜனாதிபதி உறுதியாகக் கூறியுள்ளாரே? அப்படியானால் எத்தகைய தீர்வு காணப்படும்.

பிரட்மன் வீரக்கோன்: இந்த வருடத்துக்குள் தீர்வு காண்பது நல்லதென அவர் விரும்புகிறார். அதற்கிணங்க நம்பிக்கையும் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்: எல். ரீ. ரீ. ஈ. இதற்கேற்ப நம்பிக்கையாக செயல்படுமா?

ரணில்: அதுபற்றி எனக்கு தெரியாது.

செய்தியாளர்: வடக்கு-கிழக்கு இணைப்பை ஐ. தே. க. எதிர்க்கின்றதென ஜனாதிபதி கூறியுள்ளார். தமிழ்க் கட்சிகள் இணைப்பை ஆதரிக்கின்றன. அப்படியானால் தீர்வு எப்படி வரும்?

ரணில்: ஐ. தே. கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளதை ஜனாதிபதி கூறியுள்ளார். தெரிவுக்குழு தேசிய ரீதியில் கருத்தொருமை கண்டால் தீர்வு சுலபமாகும்.

செய்தியாளர்: ஐ. தே. க., சு. க. ஆகிய பெரிய கட்சிகள் இணைப்பை எதிர்க்கின்றனவே?

ரணில்: என்றாலும் ஒரு தீர்வுக்கு வரத்தானே தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

செய்தியாளர்: இந்த வருடம் முடிய ஆறு மாதங்கள் தானே உள்ளன. அதற்குள் தீர்வு வருமா?

பிரட்மன்: துரித தீர்வைக் காண்பதற்குத் தான் அடுத்த ஆறு மாத காலத்துக்குள் கடுமையாக அனைவரும் பாடுபட வேண்டும் என்று ஜனாதிபதி விரும்புகிறார்.

[த-3]

## ஆடிவேலுக்கு இந்திய கலைஞர்

கொழும்பில் ஜூலை 11 ஆம் திகதியில் இருந்து 15 ஆம் திகதி வரை நடைபெற உள்ள ஆடிவேல் விழாவுக்கு இந்தியாவில் இருந்து கலைஞர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

(இ-த)

## மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளே இடம் பெறுகின்றன.

இராணுவப் பேச்சாளர் கேர்ணல் முனசிங்கா அண்மையில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு கூறினார்.

சேந்தான்குளம் பகுதியில் கண்ணி வெடிகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. அவற்றை அகற்றும் பணியில் படையினர் தற்போது ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

(த-3)

## தெல்லிப்பழையில்
## "பவள்" கவச வாகனமே கண்ணியில் சிக்கிச் சிதறியது!

தெல்லிப்பழைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை விடுதலைப் புலிகள் வைத்திருந்த கண்ணி வெடியில் சிக்கிச் சிதறிய இராணுவ வாகனம் தென் ஆபிரிக்கத் தயாரிப்பான 'பவள்' வாகனம் என்று பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

அச் சம்பவத்தில் வாகனத்தின் சாரதி கொல்லப்பட்டார். காயமடைந்த இரண்டு படையினரும் விமானம் மூலம் அன்றைய தினம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

தெல்லிப்பழைப் பகுதியில் பெரும்பாலான வீடுகளில் விடுதலைப் புலிகள் பொறி வெடிகளை வைத்து உள்ளனர் என்றும், அப் பிரதேசம் முழுவதும் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என்றும் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் பீரங்கித் துப்பாக்கி பொருத்தப்பட்டிருந்த இராணுவ ஜீப் ஒன்றும் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிச் சிதறியது குறிப்பிடத்தக்கது.

[இ-எ]

## வேலைக்குச் செல்வோர்
## அதிரடிப் படையினரின் அனுமதி பெற வேண்டும்

மட்டக்களப்பு, ஜூன் 20

காரைதீவில் இருந்து மட்டக்களப்பு மற்றும் தூர இடங்களுக்கு வேலையின் நிமித்தம் செல்வோர் காரைதீவில் உள்ள விசேட அதிரடிப்படையினரின் அனுமதி பெற வேண்டுமென மூகாம் பொறுப்பதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

இதன் காரணமாக இங்குள்ள சகல கிராம சேவகர் பிரிவுகளிலிருந்தும் வெளியூர் போய் வருவோரின் பெயர், விவரம் கிராம சேவையாளர்கள் ஊடாக சேகரிக்கப்பட்டு அதிரடிப்படை அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே, சகலருக்கும் அடையாள அட்டை அதிரடிப் படையினரால் வழங்கப்பட்டுள்ளது.

(த-3)


தென் இந்திய திருச்சபை யாழ். பேராயம்
நகர்ப்புற பணியகம், யாழ்ப்பாணம்.
City Mission, Jaffna.

தொழிற்பயிற்சி நெறி

மேற்படி நிலையத்தில் தையல், ஆங்கில, தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியன ஆரம்பிக்கப்படவுள்ளன. இந் நெறிகளில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளோர், 30 - 06 - 1992க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
பொறுப்பாளர்,
தென் இந்திய திருச்சபை,
நகர்ப்புறப் பணியகம்,
41, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

திட்டப் பொறுப்பாளர்,
தென் இந்திய திருச்சபை.
(சி-2690)



Practice Makes One Perfect
O/L 92

விஞ்ஞானம், கணிதம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம் வர்த்தகம், ஆகிய பாடங்களுக்கான

பயிற்சிப் பரீட்சைகள்

3 ஆவது பரீட்சை:
21-06-1992

ஒவ்வொரு மாதத்தின் 3 ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் இந்நிறுவனங்களில் நடத்தப்படும். இந் நிறுவனங்களில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பயிற்சிப் பரீட்சைகளில் பங்கேற்கலாம்

Bond — யாழ்ப்பாணம்
Selin — இருபாலை
Peari — நீர்வேலி
Kugan — ஆவரங்கால்
Satha Pons — வடமராட்சி
Brilliant — தென்மராட்சி
Vinyls — சுன்னாகம்
National — பண்டத்தரிப்பு
Subra — சித்தன்கேணி
Vinayahar — மானிப்பாய்
Y. M. C. A. — பருத்தித்துறை

வினாத்தாள்கள் பெற விரும்பும் பாடசாலைகள் 20-06-1992 இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

விவரங்களுக்கு:
Examination Unit,
BOND Institutes,
யாழ்ப்பாணம்.
(4751)



31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
க. லம்போதரன்
(ஓய்வுபெற்ற அரச கணக்காளர்)

தோற்றம்: 08—11—1931
மறைவு: 21—05—1992

தண்ணளிக் கென்று முன் னேபல கோடி தவங்கள் செய்தார்
மண்ணளிக் குஞ்செல்வ மோபெறு வார்மதி வானவர் தம்
விண்ணளிக் குஞ்செல் வமு மழி யாமுத்தி வீடு மன்றோ
பண்ணளிக் குஞ்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே!

தேவரீரது திருவருளைப் பெற்றவர்
இம்மை மறுமை வீடு மூன்றையும்
முறையானே ஒரு தலையாகப் பெறுவார்.

மனைவி,
சகோதர, சகோதரிகள்.

126/4, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்
[21405]



31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 06 — 10 — 1903
மறைவு: 12 — 05 — 1992



அமரர்
செல்லச்சாமி வயித்திலிங்கம்பிள்ளை

எங்களை வாழ வைத்த அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (20-06-1992) சனிக்கிழமை நடைபெறும்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
உறவினர்கள்.

கொத்தங்கலட்டி,
வல்வெட்டித்துறை.
(4765)



2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 10 — 08 — 1920
மறைவு: 11 — 07 — 1990



அமரர்
கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்து
திதி: 20—6—1992

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்,
ஆறாது எம் துயரம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.
(21456)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Prima - Lohman சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் Broiler குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21462)

இரும்பு வேலைத்தலத்திற்குரிய ஆயுதங்கள், Singer தையல் மெஷின். வீட்டுத்தளபாடங்கள், லினோலியம், தமிழ்-ஆங்கில தட்டச்சுக்கள், Bottle Coolers, Deep Freezer, Air Conditioner-ஜெயா ஏலவிற்பனைப் பகுதி, டாஸ் கொம்ப்ளெக்ஸ், 163, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [4767]

ஆரோக்கியமான 1½ மாத றொட்வீலர் + டோமன் பிஞ்சர் பப்பிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி சின்னம்மா யோகராஜா "கல்வ் கொற்றேஜ்", அளவெட்டி மத்தி. [தபாற்கந்தோர் - கும்பளாவளைப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்] [20597]

வீட்டுத் தளபாடங்கள் றேடியோக்கள், தையல் மெஷின், T.V. செரமிக் கிளாஸ் வகைகள், ரைப்றைட்டர், சைக்கிள், ஆர்மோனியம், மிருதங்கம் மற்றும் குசினிக்கு தேவையான பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (21446)

ஆறு வாரங்கள் நிரம்பிய வெள்ளைநிற பூச்சி அகற்றிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: "இலக்சுமி வாசா", இல. 222, தெல்லிப்பழை வீதி, சித்தன்கேணி. (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அண்மையில்) [21448]

மூன்று மாதம் நிரம்பிய (வெள்ளை, சிவப்பு) பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. யே. அல்பிரட், இல 25, பாக்றோட், றெக்கிளமேசன், குருநகர். (21463)

Chinese Fantail புறாக்கள் மற்றும் நல்ல இன புறாக்கள் விற்பனைக்குண்டு. Nallur Farm Centre, இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21461)

### அல்சேஷன்

இன விருத்திக்காக சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட அல்சேஷன் ஆண் நாய்கள் உண்டு. குறைந்த கட்டணம் தொடர்பு: ஐ. கே. நடேசன், இல. 15, மலர்மகள் வீதி, [மகேந்திரன் வீதி] அரியாலை. [21466]

### தேவை

பாண் வண்டி தள்ளிச் சென்று வியாபாரம் செய்யக் கூடிய, முன் அனுபவமுள்ளவர்கள் தேவை. சம்பளம், கொமிஷன் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். புதிய தர்சன் பேக்கறி, இல. 22, துண்டி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் (21433)

### மணப்பெண்கள் தேவை

செவ்வாய்க் குற்றமுள்ள 31 வயது, ஸ்போட்ஸ் ஆபீஸருக்கும், 36 வயது வங்கியாளருக்கும், கடை முதலாளிக்கும், 34, வயது M.Sc. Architectக்கும், குற்றமற்ற 31 வயது Ph.D. என்ஜினியருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [21439]

### மணமகன் தேவை

36 வயது, நட்சத்திரம்: மிருகசீரிடம் மணமகளுக்கு மணமகன் தேவை. சொந்த வியாபாரம், அரசாங்க உத்தியோகம், வெளி நாட்டிலோ, உள்நாட்டிலோ விரும்பப்படும். செ. விஜயரத்தினம், லெட்சுமி திருமண சேவை, நவாலி கிழக்கு, மானிப்பாய். [21460]

### புலமைப்பரிசில் பரீட்சை

சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடத்தப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 21-6-92 ஞாயிறு 8-00, 11-00 மணி நேரங்களில் நடைபெறும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [21443]

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4772]

### O/L 92 - வினாத்தாள்

O/L Dec. 92 பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். பரீட்சைப் பகுதி, Bond Institutes, யாழ்ப்பாணம். (4773)

### புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

ஆண்டு 5க்கான மேற்படி மாதிரிப் பரீட்சை, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 9-00 மணிக்கு நடைபெறும். எமது நிறுவனத்தில் கல்வி கற்கின்ற, கற்காத மாணவர்களும் இப் பரீட்சைக்குத் தோற்றலாம். பதிவு செய்யவும். நாவலர் கல்வி கழகம், நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி. (21442)

### ஜோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? தொழில் விருத்தியடையுமா? விவாகம் நடைபெறுமா? எதுவானாலும் உரிய பதில் அளிக்கப்படும். தொடர்பு: நேரம் (தினமும்) காலை 8-00 முதல் நண்பகல் 12-00 வரை, த. சிவானந்தன், பிரபல சோதிடர், இல. 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. கிளை: ஆனந்தா சோதிட நிலையம், 249 (311), நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தினமும் பிற்பகல் 3-00 -7-00 வரை. [21410]

### றோணியோ

குறைந்த செலவில் குறித்த தவணையில், தரமான முறையில் றோணியோ செய்து கொடுக்கப்படும். அறிவகம் புத்தகசாலை. வெலிங்டன் சந்திக்கு அருகாமை 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி/2682)

### மில்க்வைற் சலவைத்தூள்

மாணவ மணிகளே! உங்கள் சீருடைகளைத் துரிதமாகவும், பளிச்சிடும் வெண்மையாகவும், சலவை செய்ய, 'மில்க்வைற்' சலவைத் தூளைப் பாவியுங்கள். வெற்றுப் பக்கெற்றுகளைச் சேகரித்து, சேர்ப்பித்து, அறிவு, நீதி நூல்கள், அப்பியாசப் புத்தகங்களை அன்பளிப்பாகப் பெறுங்கள். உள்ளூர் உற்பத்தியை ஆதரியுங்கள். 'மில்க்வைற்'. [சி-2129]

### அம்பாள் திருமண சேவை

34 வயது, வங்கி உத்தியோகத்தருக்கும், 28 வயது, 30 வயது கிரிவுரையாளர்களுக்கும் மணப்பெண்கள் தேவை. ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்பு கொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர். [21457]

### O/L - கணிதம்

92 பரீட்சையில் Credit பெறுபேறுடைய 15 வருடங்கள் வினாத்தாள்கள் திருத்திய அனுபவமுள்ள B. Sc. [Cey] ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. [21458]

## இலவச தையல் பயிற்சி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் சுகாதாரத்துறைப் பிரிவில் இலவச தையல் பயிற்சி நெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

உடுப்பிட்டி — வல்லை வீதியில் அமைந்த மேற்படி தையல் பயிற்சி நிலையம் நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுப் பிரதிநிதி திருமதி வறோனிக்கா தையல் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைப்பார். [இ-5]

## Practice Makes One Perfect

### ஆண்டு-5
(புலமைப் பரிசில் - 92)
அடுத்த பயிற்சிப் பரீட்சை

### 21 - 06 - 1992

மாதத்தின் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளில் பி. ப. 1-00 மணிக்கு இந்நிறுவனங்களில் நடத்தப்படும்.

இந் நிறுவனங்களில் கல்வி கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம். பரீட்சையில் தோற்ற வசதியில்லாதவர்கள் வினாத்தாள்களுக்கு விடையளித்து தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும்.

- ★ Bond — யாழ்ப்பாணம்
- ★ Express — இருபாலை
- ★ Selin — கோப்பாய்
- ★ Pearl — நீர்வேலி
- ★ Kugan — ஆவரங்கால்
- ★ Satha Pons — வடமராட்சி
- ★ Brilliant — தென்மராட்சி
- ★ Vinyls — சுன்னாகம்
- ★ National — பண்டத்தரிப்பு
- ★ Paarathy — சித்தன்கேணி
- ★ Bitsmans — மானிப்பாய்
- ★ Keen — திருநெல்வேலி
- ★ Radiant — அரியாலை
- ★ Vinayahar — ஆனைக்கோட்டை
- ★ Lukky — சண்டிலிப்பாய்

விவரங்களுக்கு:
Examination Unit,
**BOND Institutes,**
யாழ்ப்பாணம். [4771]

தென் இந்திய திருச்சபை யாழ். பேராயம்

## யாழ்ப்பாணத் திருச்சபை

யாழ்ப்பாணத் திருச்சபை தங்களுடைய வழிபாட்டு ஆராதனைகளை எதிர்வரும் 21-06-1992 முதல் அவர்களது புதிய நிலையமான நகர்ப்புற பணியகத்தில் - 41, நாலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளனர்.

21-06-1992 இல் காலை 8-00 மணிக்கு திருவிருந்து வழிபாடும் தொடர்ந்து ஓய்வு நாட் பாடசாலையும் நடைபெறும். தென் இந்திய திருச்சபை அங்கத்தவர்கள் அனைவரும் விலாச மாற்றத்தைக் கவனிக்கவும். ஆராதனையில் பங்கு கொள்ளுமாறு கேட்கப்படுகிறீர்கள்.

செயலாளர்,
தென் இந்திய திருச்சபை.
(சி-2692]

## 6ஆம் வருட நினைவஞ்சலி



மலர்வு: 08 — 08 — 1957


உதிர்வு: 20 — 06 — 1986

### அமரர் பவளன் கிறிஸ்ரி

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மகள், சகோதரி, உறவினர், நண்பர்கள்.

பாஷையூர். [21451]

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வி. ஏகாம்பரமூர்த்தி
[அதிபர் யா/தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாசாலை]

தோற்றம்: 25—04 1944

மறைவு: 01—07—1991

திதி: 20 - 06 - 1992

எம் உள்ளத்தில் என்றும் ஒளிவீசும் ஜோதியால் நிலைத்து நிற்கும் அன்பு ஜோதியே! உங்கள் உடல் எம்மை விட்டுப் பிரிந்தாலும், நீர் எம்முடனே இருக்கின்றீர்!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பார் புகழும் ஏகாம்பரமூர்த்தி என்கின்ற
பேர் பரவும் செல்வனே பிரிந்து சென்றாய்-
நீ சென்ற
ஓர் வருடம் பூர்த்திகண்டோம் உற்ற துன்பம்-
ஆறவில்லை
நீர் வளரும் சிவனடிக்கீழ் நின் ஆன்மா வாழியவே!

மனைவி, தகப்பனார்,
மாமனார், சகலன்மார்,
மைத்துனிமார், மக்கள்.

"இன்பலனை",
மூளாய்,
சுழிபுரம்.
(21445)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கால எல்லை சாத்தியமா?

இனப்பிரச்சினையைத் தீர்வை வைப்பதற்கு வடக்கு - கிழக்கில் இப்போது நடைபெற்று வரும்யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்குக் கால எல்லை நிர்ணயக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் விரும்புவதாகச் செய்திகள் கூறுகின்றன.

இனப்பிரச்சினைக்கு இந்த வருட இறுதிக்குள் திட்டம் ஒன்றை வகுத்து நிரந்தரத் தீர்வு கண்டுவிட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் விருப்பம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கால எல்லை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதை எவரும் தவறு என்று கூறமாட்டார்கள். எந்த விவகாரமானாலும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அது செய்து முடிக்கப்படுவதே சிறப்பு

இனப் பிரச்சினை கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக இழுத்தடிக்கப்பட்டு வரும் ஒன்று. அவ்வாறு இழுத்தடித்துக் காலத்தைக் கடத்தி வருபவர்கள் தமிழர்கள் அல்லர். சிங்கள அரசியல் வாதிகள் தான். ஏனெனில் இனப் பிரச்சினையை வைத்தே அவர்கள் காலங்காலமாகத் தமது அரசியலை நடத்துகிறார்கள்.

சிங்கள மக்களும் பெரும் ஏமாளிகள் என்பதால் இனப் பிரச்சினையைப் பயன்படுத்தித் தமது அரசியல் தலைவர்கள் பிழைப்பதற்கு ஆதரவளித்து வருகிறார்கள்!

இனப் பிரச்சினைய ஒரு கால எல்லை வகுத்து அதற்குள் தீர்த்துவிட வேண்டும் என்று சிங்களத் தலைவர்கள் மனமார எண்ணினால் அது பெரும் காரியமாகும்.

தமிழர்களைப் பொறுத்த வரையில், தமது பிரச்சினை எவ்வளவு விரைவில் தீருமோ அவ்வளவு விரைவில் தீரவேண்டும் என்பதே அவர்களின் வேணவா. அடக்குமுறையிலிருந்தும் ஆக்கிரமிப்பிலிருந்தும் எவ்வளவு விரைவாக விடுதலையும், விடிவும் பிறக்கிறதோ அந்தளவுக்கு அவர்கள் புதிய வாழ்வைச் சமைக்க முடியும்.

ஆனால் அரசாங்கத் தலைவர்கள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்று எதனைக் கருதுகிறார்கள், நடைமுறைப் படுத்துகிறார்கள் என்பதனைப் பொறுத்தே இனப் பிரச்சினையை ஒரு கால எல்லைக்குள் தீர்ப்பது சாத்தியமாகும்.

தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்ற வல்ல ஒரு நியாயமான தீர்வை உருவாககுவதில் சிங்களத் தலைவர்கள் வெற்றி கண்டால் மட்டுமே இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவது சாத்தியம்.

தங்கள் இலக்குகளை எய்துவதற்கும், எண்ணங்களை ஈடேற்றுவதற்தும். கற்பனைகளை நிசமாக்குவதற்கும் ஏற்ற வகையில் சிங்களத் தலைவர்கள் தீர்வுகளை உருவாக்கும் வரை இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர முடியாது.

தமிழர்களின் தாயகம் துண்டாடப்படாமலும், தமிழர்களின் பாதுகாப்புக்குத் தமிழர்களே பொறுப்பாகும் வகையிலும், தமது தலைவிதியை தாமே நிர்ணயிக்கும் பூரண உரிமையை அவர்கள் அனுபவிக்கவும் வகை செய்யும் தீர்வு ஒன்றைச் சிங்களத் தலைவர்களால் உருவாக்க முடிந்தால் மட்டுமே. இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர இயலும்.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் காலவரையறை விதிக்க முனைபவர்கள் முதலில் இராணுவத் தீர்வை நாடுவதை நிறுத்தி, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரச் சிந்திக்காமல் அதனைத் தீவிரப்படுத்துவது ஏன்?

# வளங்களைப் பாவிக்கும் போது சூழலுக்குக் கேடு விளைக்கலாகாது

வரலாற்றுச் சிறப்புமிக்க பூமி உச்சிமாநாடு றியோ டீஜெனிரோவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவெய்தியது.

ஐ. நா. சபையின் சுற்றுச் சூழல் அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இம்மாநாட்டில் 178 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றினார்கள். பூமியை அழிவிலிருந்து காப்பாற்ற உலகளாய செயற்திட்டம் ஒன்றை இவர்கள் மாநாட்டில் நிறைவேற்றினார்கள்.

மாநாட்டில் பல தீர்மானங்கள், உடன்படிக்கைகள், பிரகடனங்கள் என்பவை நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை:

1. பூமியின் வெப்பநிலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான உடன்படிக்கை.

2. உயிரினங்களை அழிவிலிருந்து காப்பாற்றி அவற்றின் பல இனத் தன்மையைப் பேணுவதற்கான உடன்படிக்கை.

3. அஜென்டா - 21 எனப்படும் 21 ஆம் நூற்றாண்டில் அமுல் செய்யப்படவேண்டிய செயற்திட்டம்.

4. இயற்கைச் சூழலைப் பாதுகாக்க நாடுகள் கடைப்பிடிக்க வேண்டிய 27 கோட்பாடுகள் அடங்கிய பிரகடனம்.

இவற்றுள் முதல் இரண்டு ஒப்பந்தங்களும் 150க்கும் மேற்பட்ட நாடுகளால் கைச்சாத்திடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தங்கள் காலப் போக்கில் நாடுகளைக் கட்டுப்படுத்தும் உடன்படிக்கைகளாக மாற்றம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

முதலாவது ஒப்பந்தம் பூமி சூடாவதைத் தடுக்க வளிமண்டலத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கை பற்றியது இதில் குறிப்பாக ஓசோன் படலத்தை அழிக்கும் குளோரோ புளுரோ கார்பன் போன்ற நச்சு வாயுக்கள், வளிமண்டலத்தின் வெப்பத்தை அதிகரிக்கும் கரியமில வாயு என்பவற்றின் உற்பத்தியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இரண்டாவது ஒப்பந்தம் மிருகங்களும், தாவரங்களும், நுண்ணுயிர்களும் அருகி அற்றுப் போவதைத் தடுக்க வகை செய்கிறது. தொழிற்சாலைக் கழிவுகளாலும், நச்சு வாயுக்களாலும் ஆற்று நீர், கடல் நீர், நிலம் என்பவை மாசடைவதால் அவற்றில் தங்கியுள்ள உயிரினங்கள் அழிவை எதிர் நோக்குகின்றன. சிலவகை உயிரினங்கள் முற்றாக அழிந்து விடும் அபாய நிலை தோன்றியுள்ளது.

#### பல் இனத்தன்மை

உலகில் உயிரின வாழ்வுக்கு அவற்றின் பல் இனத்தன்மை பேணப்பட வேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு வகை உயிரினமும் — மனிதர் உட்பட — ஒன்றில் ஒன்று தங்கியிருக்க வேண்டிய தேவையை இயற்கைச் சுற்று நியதி வகுத்திருக்கிறது. இந்தச் சுற்று ஒரு தொடர் சங்கிலி போன்றதாகும். இச்சங்கிலியில் ஒரு வளையம் நீக்கப்பட்டாலும் தொடர் அறுந்து போகும். உயிரின வாழ்வுச் சமநிலை பாதிக்கப்படும். எனவே உயிரினங்களின் பல்லினத் தன்மை பேணப்படுவது அவசியமாகும்.

மூன்றாவதான 'அஜென்டா-21' என்ற வேலைத் திட்டம் 800 பக்கங்கள் அடங்கிய சாஸனமாக உருவாக்கப்பட்டுள்ளது. 21 ஆம் நூற்றாண்டின் அபிவிருத்தி வேலைகள் பூமிப் பாதுகாப்பை மனதிற் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி இச் சாஸனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது

காடுகளைப் பாதுகாப்பதற்கான ஒரு கொள்கை அறிக்கையும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இந்த அறிக்கை நாடுகளைக் கட்டுப்படுத்துவதாக அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

#### றியோ பிரகடனம்

மேலும், மாநாட்டில் 'றியோ பிரகடனம்' எனப்படும் 27 கோட்பாடுகள் அடங்கிய பிரகடனம் ஒன்றும் பிரதிநிதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தப் பிரகடனத்தில் முக்கிய அம்சங்கள் வருமாறு;-

★ இயற்கையுடன் இணைந்த, ஆரோக்கியமான, பயனுள்ள வாழ்வுக்கு சகல மனிதரும் உரித்துடையவர்கள்.

★ அரசுகள் தமது வளங்களை பயன்படுத்தும் இறைமையைக்கொண்டுள்ளன. எனினும் வளங்கள் பயன்படுத்தப் படும்போது சூழலுக்குக் கேடு விளைவிக்காது என உறுதிப் படுத்தும் பொறுப்பு அவற்றுக்கு உண்டு

★ போதியளவு அபிவிருத்திக்காக விலக்க முடியாத தேவையான வறுமையை ஒழித்தலுக்கு சகல அரசுகளும், மக்களும் ஒத்துழைக்க வேண்டும்.

★ வளர்முக நாடுகளின் — குறிப்பாக வறுமை நிலையில் உள்ள நாடுகளின் — தேவைகளுக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

★ விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவுப் பரிமாற்றங்களின் மூலம் விஞ்ஞான ரீதியான புரிந்துணர்வை வளர்க்க அரசுகள் ஒத்துழைக்க வேண்டும்.

★ சூழலைப் பாதிக்கும் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை அரசுகள் ஒன்றுக்கொன்று தெரிவிக்க வேண்டும்.

★ சூழலை நிர்வகிப்பதற்கு சுதேச மக்களும் அவர்களது சமூகமும் உரிமையுடையவர்கள்.

★ ஆயுதச் சண்டைகளின் போது தேசங்கள் சூழல் தொடர்பான சர்வதேச விதிகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்.

★ சமாதானம், அபிவிருத்தி, சூழல் பாதுகாப்பு என்பன ஒன்றில் மற்றொன்று தங்கியுள்ளவை. பிரிக்க முடியாதவை.

ஒப்பந்தங்கள், பிரகடனங்கள் என்பன நிறைவேற்றப்பட்டு விட்டாலும் இவை நாடுகளைக் கட்டுப்படுத்தாது என்பதால் ஒவ்வொரு நாடும் எவ்வளவு தூரம் இவற்றை அமுல் செய்யும் என்பது கேள்விக்குறியே.

வளர்முக நாடுகளும், வளர்ச்சி அடைந்த நாடுகளும் சூழல் பாதுகாப்பு பற்றி வெவ்வேறு பார்வைகளைக் கொண்டுள்ளன.

சூழல் கேட்டிற்கு வளர்ச்சி அடைந்த நாடுகளே காரணம் என வளரும் நாடுகள் கூறுகின்றன.

ஆலைத் தொழிலில் வளர்ச்சி அடைந்த நாடுகளே பெருமளவு நச்சு வாயுக்களை உற்பத்தி செய்கின்றன; [illegible] புவியை மாசடையச் செய்[illegible] என வளர்முக நாடுகள் குற்றம் சுமத்துகின்றன. எனவே சூழலைப் பாதுகாக்க வளர்ச்சி அடைந்த நாடுகளே கூடியளவு நிதி வழங்க வேண்டும் எனவும் வளர்முக நாடுகள் வாதிடுகின்றன.

#### காடு அழிப்பு

பூமி வெப்பம் அதிகரிக்க வளிமண்டல வாயுத் தொகுப்பில் கரியமில வாயுவின் விகிதாசாரம் கூடியதே காரணம் என்பது கண்டறியப் பட்டுள்ளது.

காடுகள் இராட்சத இரசாயனத் தொழிற்சாலைகள் போலச் செயற்பட்டு கரியமில வாயுவை உள்வாங்கி உயிர்வாயுவை வெளிவிடுகின்றன. வளரும் நாடுகள் காடுகளை அழிப்பதால் இந்த வாயு மாற்ற அளவு குறைவடைகிறது. எனவே வளரும் நாடுகள் காடுகளை அழிப்பதை நிறுத்த வேண்டும் என வளர்ச்சி அடைந்த நாடுகள் கூறுகின்றன.

வளர்ச்சி அடைந்த நாடுகளில் சூழல் கேடு, பொருளாதார வளர்ச்சி காரணமாக ஏற்படுகிறது. ஆனால் வளர்முக நாடுகளில் வறுமை காரணமாகவே சூழல் கேடு நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன.

#### அமெரிக்காவின் தயக்கம்

வளர்ச்சி அடைந்த நாடுகளில் — முக்கியமாக அமெரிக்கா — உயிரினங்கள் தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட முதலில் மறுப்புத் தெரிவித்தது. நச்சு வாயுக்கள், தொழிற்சாலைக் கழிவுகள் என்பவற்றைக் கட்டுப்படுத்துவதானால் பல தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டிவரும். தொழிலாளர் வேலை இழப்பார்கள். எனவே ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள இந்த ஆண்டில் இத்தகைய கடும் நடவடிக்கை எடுக்க ஜோர்ஜ் புஷ் விரும்பாதது வியப்பல்ல.

ஆனால் அமெரிக்கா கையெழுத்து இடாததன் மூலம் வளரும் நாடுகளின் அதிருப்தியைத் தேடிக் கொண்டது. ஒப்பந்தத்தில் அமெரிக்காவைக் கையெழுத்திட வைக்க ராஜரீக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஈற்றில், கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட ஒப்பந்தத்தில் புஷ் கையெழுத்திட்டுள்ளார். நச்சு வாயுக்களைக் கட்டுப்படுத்த விதிக்கப்பட்ட கால எல்லை ஒப்பந்தத்திலிருந்து நீக்கப்பட்டது. மேலும், அமெரிக்கா வளரும் நாடுகளுக்குக் கூடிய உதவி வழங்கும் என புஷ் மாநாட்டில் அறிவித்தார்.

கனடா, சிலி, ஜேர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 12 வயதுச் சிறுமியர் நான்கு பேர் மாநாட்டில் உரையாற்றினர்.

மாநாட்டின் முடிவுகள் வளரும் நாடுகளுக்குத் திருப்தி அளிக்கவில்லை. வளர்ச்சி அடைந்த நாடுகள் போதிய நிதி அளிக்கவில்லை. மாநாட்டின் ஆரம்பத்தில் சூழல் பாதுகாப்பு நிதிக்கு 100 கோடி டாலர் சேர வேண்டுமென எதிர் பார்க்கப்பட்டது. உறுதியளிக்கப்பட்டுள்ள உதவித்தொகை இன்னமும் வெளியிடப்படவில்லை. ஆனால் எதிர்பார்த்ததை விடக் குறைவாகவே சேர்ந்துள்ளது.

உலகின் முதலாவது சூழல் மாநாடு 20 ஆண்டுகளுக்கு முன் 1971 இல் சுவீடனில் நடந்தது குறிப்பிடத்தக்கது. ★

## றியோ மாநாட்டில் உலக நாடுகள் இணங்கிய கோட்பாடுகளில் ஒன்று

– காந்தசாரணன்

## தேசிய கல்வி ஆணைக் குழுவின் பகிரங்க விசாரணை ஜூலை 1 இல்

கொழும்பு, ஜூன் 20

தேசிய கல்வி ஆணைக்குழு தனது பகிரங்க விசாரணைகளை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நடத்த இருக்கிறது.

ஆணைக்குழுவின் முன்னிலையில் நேர்முகச் சாட்சியம் அளிக்க விரும்புவோர் ஏழு தினங்களுக்கு முன்பதாக தமது பெயர் மற்றும் விவரங்களை அறிவிக்க வேண்டும் என்று ஆணைக்குழுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஆகஸ்ட் 10ஆம் திகதி திருகோணமலை சென். ஜோசப் கல்லூரியிலும் —

ஆகஸ்ட் 13ஆம் திகதி மட்டக்களப்பு வின்செண்ட் மகளிர் கல்லூரியிலும்—

செப்டம்பர் 25ஆம் திகதி வவுனியா காமினி மகாவித்தியாலயத்திலும்—

ஜூலை 13ஆம் திகதி அம்பாறை சாரணாதி மகாவித்தியாலயத்திலும்—

ஜூலை 14ஆம் திகதி அக்கரைப்பற்று ஆயிஷா மகாவித்தியாலயத்திலும்— பகிரங்க விசாரணைகள் நடைபெறும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பகிரங்க விசாரணைகள் நடத்தப்படுவது பற்றிய தகவல் ஏதும் அவ்வறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. (இ-எ)

### யுத்த மேகம் சூழ்ந்து நிற்கிறது:

## தமிழ் மண்ணைக் காக்க புலிகளுடன் இணையுங்கள்!

### ஒலிபெருக்கி மூலம் அழைப்பு

தமிழீழம் எங்கும் யுத்த மேகம் சூழ்ந்து நிற்கிறது. யாழ். குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் பல்லாயிரக் கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் தமிழ் மண்ணைக் காக்க — தமிழ் மக்களைப் பாதுகாக்க விடுதலைப் புலிகளுடன் இணைந்துசெயற்படுங்கள். தாமதிக்க நேரமில்லை. நாட்டைக் காக்க வீட்டுக்கு ஒருவர் உடனே எம்முடன் இணையுங்கள்!

— இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் மக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் அழைப்பு விடுத்து வருகின்றனர்.

தமிழீழ மக்களே! குடாநாட்டின் கரையோரப் பகுதிகள் எதிரியால் சூழப்பட்டு வருகிறது. கவச வாகனங்கள் ஏராளம் நிறுத்தப்பட்டுள்ளன. ஆகாயத்தில் யுத்த விமானங்கள் வெள்ளோட்டம் பார்க்கின்றன. கடற் பிராந்தியங்களில் பீரங்கிப் படகுகள் ஓடித் திரிகின்றன.

தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து தமிழ் மக்களை அடிபணிய வைக்கும் நோக்குடன் எதிரிப்படை திட்டம் தீட்டிக் கொண்டிருக்கும் இந்தவேளையில் என்ன செய்யப்போகிறீர்கள்? யோசித்துக் கொண்டிருக்கும் நேரம் இதுவல்ல!

இவ்வாறு அந்த அழைப்பில் தெரிவிக்கப்பட்டது. [ஓ-5-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடு கடத்தல் விவகாரம்:

# விசாரணைகளை நடத்த சி. பி. ஐக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, ஜூன் 20

பிரபாகரன் மற்றும் பொட்டம்மான் ஆகியோரைக் கைது செய்வது தொடர்பாகவோ அல்லது அவர்களை இந்தியாவிடம் ஒப்படைப்பது தொடர்பாகவோ இலங்கை வந்து விசாரணை நடத்த இந்திய மத்திய புலனாய்வுக் குழு (சி. பி ஐ.) உட்பட எந்தக் குழுவுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால் ராஜீவ் காந்தி, பத்மநாபா கொலைகள் தொடர்பாக இலங்கை வந்து விசாரணை நடத்த மட்டும் இரண்டு இந்தியக் குழுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கடந்த புதன்கிழமை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

மூன்று இந்தியக் குழுக்கள் அனுமதி கோரியுள்ளன என்றும் — அதில் இரண்டுக்கே அனுமதி வழங்கப்பட்டது என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை —

பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைப்பது தொடர்பாக பேச இந்தியாவிலிருந்து இலங்கை வர ஒரு குழு அனுமதி கேட்டுள்ள போதும், சட்டம் சம்பந்தமான இந்த விவகாரம் பற்றித் தற்பொழுது ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் சொன்னார். [த-3]

# மேல் நீதிமன்ற முடிவையே அரசு செயற்படுத்தும்!

## டிரோன் பெர்னாண்டோ கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 20

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன், உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் ஆகியோரை தன்னிடம் ஒப்படைக்குமாறு இந்தியா விடுக்கும் எந்த ஒரு கோரிக்கை தொடர்பாகவும் இலங்கை மேல் நீதிமன்ற முடிவையே அரசு செயற்படுத்த முடியும்.

சட்ட, சிறைச்சாலைகள் சீரமைப்பு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பயங்கரவாதம் தொடர்பாக சார்க் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். [இ-த]

# ஆலயங்கள் மீது தாக்குதல்: நஷ்டஈடு வழங்க வேண்டும்

## இந்துப் பேரவை கோரிக்கை

''இராணுவ நடவடிக்கைகளால் ஆலயங்களுக்கு ஏற்பட்ட அழிவுகளையும் அப்பாவி மக்களின் உயிரிழப்புக்களையும் ஈடு செய்யும் முகமாக பாதிக்கப்பட்டவர்களுக்கும், ஆலய தர்மகர்த்தாக்களுக்கும் தகுந்த நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.''

இப்படியான கோரிக்கை ஒன்றை இலங்கை இந்துப் பேரவை விடுத்துள்ளது.

இது தொடர்பாக பேரவையின தலைவர் யோகேந்திரா துரைச்சாமி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளதாவது:-

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அண்மையில் நடந்த மும்முனைத் தாக்குதல் பெரிதும் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் தாக்குதல்களினால் இந்து ஆலயங்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் சேதங்கள் குறித்தும் பல பொதுமக்கள் கொல்லப்பட்டும், பெரும் காயங்களுக்கும் உள்ளாகி இருப்பது குறித்தும் யாரும் அறியமாட்டார்கள்.

வழிபாட்டுக்கெனக் கோயில்களுக்கு சென்ற அடியார்கள் இப்படி தாக்கப்படலாமா?

தெல்லிப்பழையில் பிரசித்தி பெற்ற துர்க்கையம்மன் ஆலயமும், வற்றாப்பளையில் தொன்மை வாய்ந்த அம்மன் ஆலயமும் பெரும் சேதத்துக்குள்ளாகியுள்ளன.

துர்க்கையம்மன் ஆலயம் உயர்ந்த, கவர்ச்சியான கோபுரத்தையுடைய கோயில். கண்மூடித்தனமாகத் தாக்கினாலொழிய இக்கட்டடம் குண்டு வீச்சுக்குள் அகப்பட்டிருக்கமுடியாது. இக் கோயில் சேதப்பட்டதும், அடியார்கள் கொல்லப்பட்டதும் மர்மமாகவேயுள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் தொடங்கி ஊரடங்கு அமுல் செய்யப்பட்டதும் பொது மக்கள் பாதுகாப்பின் பொருட்டு கோவில்களில் தஞ்சம் புகும்படி கேட்கப்படுகிறார்கள். எனவே படையினர் அப்படியான இடங்களை பாதுகாப்பதில் அக்கறை காட்டியிருக்க வேண்டும். இனிமேல் இப்படியான அசம்பாவிதங்கள் இடம் பெற அனுமதிக்கக் கூடாது என்று ஜனாதிபதியை கேட்டுள்ளோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-3]

# மிகப் பெரிய பக்டீரியா ஆஸியில் கண்டுபிடிப்பு

சிட்னி, ஜூன் 20

உலகின் மிகப்பெரிய பக்டீரியா ஆஸ்திரேலியாவில் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வழமையான நுண்கிருமியிலும் பார்க்க இது பத்து லட்சம் மடங்கு பெரியதாகும்.

இந்த பக்டீரியாவை நுணுக்குக் காட்டியின் துணையின்றியே பார்க்கக்கூடியதாக இருக்கிறதாம்.

சிட்னி பல்கலைக்கழகம் இந்தக் கண்டுபிடிப்புப்பற்றி நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது. ஆஸ்திரேலியாவின் கடற்கரையில் முருகைக் கற்பாறைப் பகுதியில் பிடிக்கப்பட்ட மீனில் இந்த பக்டீரியா காணப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20 - 06 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## வர்த்தகர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

போர்க்காலச் சூழ்நிலையைப் பயன்படுத்தி அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்குவதையும் விலை கூட்டி விற்பதையும் நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம் வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

''ஒரு சில வர்த்தகர்கள் செய்யும் இத்தகைய தவறுகள் முழு வர்த்தகர்களுக்கும் அவப்பெயரை உண்டாக்குகின்றன. எமது மக்களின் தேவைகளை உணர்ந்து அவர்களுக்கான சேவைகளை வழங்கும் பொருட்டு எமது வர்த்தகர்கள் நியாயமான விலையில் பொருள்களை விற்பனை செய்ய வேண்டும்.'' — இப்படி வர்த்தகர் சங்கம் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [உ]

## சுறாக்களால் தாக்கப்படும் ஜப்பானிய மீனவர்

டோக்கியோ, ஜூன் 20

ஜப்பானிய மீனவர்கள் சுறாக்களால் தாக்கப்படும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை 71 வயதான ஜப்பானிய மீனவர் ஒருவர் சிக்கோகு தீவுக் கடலில் 5 மீற்றர் நீளமான சுறா ஒன்றினால் தாக்கப்பட்டார். அவர் தன்னிடமிருந்த துப்பாக்கியால் சுறாவை சுட்டுக் கொன்று உயிர் தப்பினார்

3 மாதங்களுக்கு முன்னர் இதே கடற் பகுதியில் மற்றொரு மீனவர் சுறாவுக்கு இரையானார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-10)

### தெரிவுக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் திட்டத்தையே தமிழ்க் குழுக்கள் அடியோடு நிராகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய திட்டத்தில் இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று தமிழ்க் கட்சி ஒன்றின் பிரமுகர் சுட்டிக் காட்டியதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லாத எந்தத் திட்டத்தையும் ஏற்பதில்லை என்ற விடயத்தில் எல்லாத் தமிழ்க்குழுக்களுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டிருப்பதாகவும் அந்தப் பிரமுகர் தகவல் வெளியிட்டதாக பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது [உ-5]

### ம. எண்ணெய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

இத்தகைய குற்றச் செயல்களைப் புரிந்தோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுவதுடன் அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குத் தடுத்தும் வைக்கப்படுவர் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

### கனடாவில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தத்து எடுக்கப்பட்ட பிள்ளைகள் உட்பட தாய்மாருக்கும், பிள்ளைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

★ உண்மையான அகதிகள் என அகதிச் சபையாலும், குடியேற்றத் திணைக்களத்தாலும் அடையாளம் காணப்படுவோருக்கும் கனடாவில் குடியேற முன்னுரிமை வழங்கப்படும்.

★ கனடாவில் பொருளாதார அபிவிருத்திக்கு குறிப்பிடத்தக்க வகையில் பங்களிப்புச் செய்யக்கூடிய முதலீட்டாளர்கள் மூன்றாவது வகையினர். (உ-3]

## கொழும்பு முகத்துவாரம்

# பொலீஸ் பொறுப்பதிகாரியை கைது செய்யப் பிடிவிறாந்து!

## பயங்கரவாதத் தடுப்பு வழக்கில்

கொழும்பு, ஜூன் 20

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட ஒரு வழக்குத் தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறிய கொழும்பு முகத்துவாரம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குகொழும்பு மேல் நீதிமன்றம் 'வாரண்ட்' [பிடிவிறாந்து] உத்தரவு பிறப்பித்தது.

மேல் நீதிமன்ற நீதிபதி வெஸ்லி அபேசேகரா இந்த உத்தரவை விடுத்தார்.

விடுதலைப் புலிகளுக்கு உதவியதாக ஜோன் பொஸ்கோ என்ற இருதயநாதன், இந்திரா ஞானராணி ஞானப்பிரகாசம் ஆகிய இருவருக்கும் எதிராகத் தொடரப்பட்ட வழக்கிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இரண்டாவது எதிரியான இந்திரா ஞானராணி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜரான போது பிணையில் விடப்பட்டிருந்தார். ஆனால் அதற்குப் பின்னர், மேல்நீதிமன்ற விசாரணை எதற்கும் அவர் ஆஜராகவில்லை.

எனவே அவருக்கு எதிராக — முகத்துவாரம் பொலீஸ் நிலையம் ஊடாக — மேல் நீதிமன்றம் இரு தடவைகள் அழைப்பாணை உத்தரவு பிறப்பித்திருந்தது.

ஆனால் இரண்டாவது எதிரி முகத்துவாரம் விலாசத்தில் இல்லை என்பதால் அந்த உத்தரவை அவரிடம் கையளிக்க முடியவில்லை என்று கூறப்படுகிறது.

இதனால் குற்றவியல் கோவையின் 242 ஆம் பிரிவின்படி இரண்டாவது எதிரியிடம் அழைப்பாணை கையளிக்க முடியாதிருப்பது பற்றிய சாட்சியம் நெறிப்படுத்தப்பட்டு, எதிரி இல்லாமலேயே வழக்கை விசாரிக்க அரசு தரப்பு முடிவு செய்துள்ளது

அழைப்பாணை கையளிக்க முடியாதிருப்பது பற்றி சாட்சியம் அளிக்கவே பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அவர் நீதிமன்றத்தில் சமுகம் தரவில்லை.

இதனால் அவருக்கு எதிராக பிடிவிறாந்து பிறப்பித்த நீதிபதி, வழக்கை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். [உ-த-3]

## குடாநாடு மீதான தாக்குதல்:

# சேதங்கள் பற்றிய விவரம் புனர்வாழ்வு அமைச்சுக்கு!

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். குடாநாட்டில் கடந்த 28 ஆம் திகதிக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விவர அறிக்கை புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

இறந்தோர், காயமடைந்தோர் எண்ணிக்கை, சேதமடைந்த ஆலயங்கள், பாடசாலைகள் பற்றிய விபரங்கள், அகதிகள் நிலை ஆகியவை பற்றிய புள்ளி விவரங்களை யாழ் செயலகம் புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பியுள்ளது. (உ-3]

## ஊரியான் பாதையில்

# வருமானம் பெறுவதற்கு இப்படியும் தந்திரம்!

ஆனையிறவைக் கடக்க ஊரியான் பகுதியால் செல்லும் பயணிகள் படும்பாடு பெரும்பாடு.

சேறும் சகதியுமான பாதையால் பெரும் சிரமத்துடன் பயணிகள் செல்கின்றனர். அவர்களிடம் பணத்தைக் கறக்க சிலர் முயற்சிக்கின்றனர்.

பொதிகளைத் தூக்கி சம்பாதிப்பவர்கள் எனக் கூறப்படும் இருவர், அப்பகுதியில் இரவோடிரவாக சேறுள்ள பாதையில் கிடங்குகளை வெட்டினர் என்றும் —

அவ்வழியால் வந்த பலர் அந்தக் கிடங்குகளில் விழுந்து பெரும் சிரமத்தை அனுபவித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பயணிகளிடம் கிடங்குகளின் நிலையைக் கூறி, அவர்களிடம் உள்ள பொதிகளை தூக்கி வருமானம் பெறவே இந்தத் தந்திரம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக இருவர் விசாரணை செய்யப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

# கே. ஜி. பியிடமிருந்து நிதி ஐ. தே. க. பெறவில்லை!

## அமைச்சர் ரணில் கூறுகிறார்

முன்னாள் சோவியத் யூனியனின் உளவு ஸ்தாபனமான கே. ஜி. பியிடமிருந்து ஐக்கிய தேசியக் கட்சி நிதி உதவி பெறவில்லை.

அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும் ஐக்கிய தேசியக் கட்சியிலும் உள்ள கே. ஜி. பிக்கு விசுவாசமானவர்கள் 1989 தேர்தலில் வெல்லுவதற்கு கே. ஜி. பி நிதி உதவி வழங்கியதாக ''இந்தியாவிலும் இலங்கையிலும் கே. ஜி. பி. யின் கரம்'' என்ற தலைப்பில் இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்ததும்—

இச்செய்தி இலங்கைப் பத்திரிகைகள் சிலவற்றில் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கப்பட்டிருந்ததும் தெரிந்தவையே. [இ-த]

## நியமனம்

வடக்குக் கிழக்கு மாகாணத்தின் உதவிப் பதிவாளர் நாயகமாக திரு. எஸ். முத்துக்குமரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் மட்டக்களப்பு மாவட்ட மேலதிகப் பதிவாளராகக் கடமையாற்றியவர் ஆவார். [த]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org